முதலமைச்சர் அவர்கள் வருகின்ற ஆகஸ்ட் மாதம் 5ஆம் தேதி கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை புரிவதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து நேற்று (02.08.2024) திரு.வி.க.நகர் மாநகராட்சி மண்டல அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா ராஜன், மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், தலைமை பொறியாளர் (மாநகராட்சி) எஸ்.இராஜேந்திரன், சி.எம்.டி.ஏ. தலைமை திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமை பொறியாளர்கள் (பொதுப்பணித்துறை) எஸ். மணிவண்ணன், (மின்சாரத் துறை) எ.ஆர்.மாஸ்கர்நாஸ், (குடிநீர் வடிகால் வாரியம்) ஆர்.சிவமுருகன், (தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்) திரு.எஸ்.லால் பகதூர். மண்டல அலுவலர் ஏ.எஸ். முருகன், செயற்பொறியாளர் ஆர்.செந்தில்நாதன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் அடங்கிய

10 ஊராட்சிகளில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மக்களிடம் குறைகளைக் கேட்டறிகிறார்!

ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

காஞ்சிபுரம்,ஆக.3

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், சிறு, குறு மற்றும் நடுத் தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட் பட்ட, குன்றத்தூர் வடக்கு ஒன்றியத் தில் அடங்கிய 10 ஊராட்சிகளிலும் இன்று (03.08.2024 சனிக்கி ழமை) பொதுமக்கள், குடியிருப்போர் பொது நலசங்கத்தி னர், வியாபார பொதுமக்களிடம் குறைகளை கேட்கிறார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பைஆ.மனோக ரன், ஒன்றிய பெருந்தலைவர் திரு மதி. சரஸ்வதி மனோகரன், மற்றும் ஒன்றிய துணை பெருந்தலைவர் திருமதி. உமாமகேஸ்வரி வந்தேமா தரம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இன்று (03.08.2024 சனிக்கி ழமை) காலை 9.00 மணி - பெரி யபணிச்சேரி - ஊராட்சி மன்ற அலு வலகம் அருகிலும் - காலை 9.30 மணி - தண்டலம்- மணிமேடிலும் காலை 10.30 மணி- கோவூர் - தெருவீதியம்மன் கோவில் தெரு அருகிலும் காலை 11.00 மணி கோவூர் - தர்மராஜா கோயில் தெரு விலும் பகல் 12.00 மணி- தரப்பாக் கம் - தரப்பாக்கத்திலும் பகல் 12.30 மணி- இரண்டாம் கட்டளை- சதா னந்தபுரத்திலும் மக்கள் குறை கேட்பு முகாம் நடைபெறுகிறது.

அது சமயம் நமது ஊராட்சி மன் றத் தலைவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக நிர் வாகிகள், மாவட்ட ஒன்றிய அணிக ளின நிர்வாகிகள் கிளை கழக செய லாளர்கள், கலந்தாலோசனை செய்து கீழ்க்கண்ட அட்டவனைப் படி மக்கள் குறைக்கேட்பு முகாம் நிகழ்ச்சியினை சிறப்பான முறை யில் ஏற்பாடு செய்திட வேணுமாய் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமா தரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி செம்பாக்கம் வடக்கு பகுதி அஸ்தினாபுரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விலையில்லா மிதிவண்டிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி மாணவ–மாணவிகளுக்கு வழங்கினார் அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன், தலைமை ஆசிரியர் சந்திரன், மாமன்ற உறுப்பினர் சரண்யா, மதுரை வீரன், பெற்றோர், ஆசிரியர் கழக தலைவர் எம்.நாகராஜ், க.ரமேஷ், எம்.இளவரசன், லோ.டில்லி பாபு, கே.பூபதி, எம். சார்லஸ், பி.பாலச்சந்தர், பெற்றோர், ஆசிரியர் கழக நிர்வாகிகள், ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

குறைந்த விலையில் கிடைப்பதால் எல்லோர் கையிலும் செல்போன்:

கடந்த நான்கு ஆண்டுகளில் நான்கு மடங்காக உயர்ந்த டிஜிட்டல் பரிவர்த்தனை!

டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி,ஆக.3-

கிராமப் பகுதிகளுக்கு எந்தளவுக்கு இணையதள வசதி சென்று சேர்ந்திருக்கி றது? இணையதள வசதி போதுமான அளவுக்கு இல் லாததால் கிராமப் பகுதிக ளில் டிஜிட்டல் பரிவர்த் தனை முழு அளவில் நடைபெறுவது தடைபடுகி றதா? என்று மாநிலங்கள வையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என். வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய தகவல் தொடர்பு மற்றும் கிராமப் புற வளர்ச்சித் துறை இணையமைச்சர் டாக்டர் பெம்மசனி சந்திரசேகர் அளித்த பதில் வருமாறு:

இந்திய தொலைத்தொ டர்பு ஒழுங்குமுறை ஆணையம் வழங்கிய தரவு களின்படி மார்ச் 2024 வரையிலான காலகட்டத் தில் இந்தியாவில் கிராமப் பகுதிகளில் சுமார் 40 கோடி இணையதள இணைப்புகளும்; நகர்ப்ப குதிகளில் 55 கோடி இணைப்புகளும் பயன் பாட்டில் உள்ளன. நகர்ப் பகுதிகளைப் பொறுத்த வரை அதிகபட்சமாக மகா ராஷ்டிரா மாநிலத்தில் 7.5 கோடி இணைப்புகளும், கிராமப் பகுதிகளைப் பொறுத்தவரை உத்தரப் பிரதேசத்தில் அதிகபட்ச மாக 6.4 கோடி இணைய தள இணைப்புகளும் வழங் க ப் ப ட் டு ள் ள ன . தமிழகத்தைப் பொறுத்த வரை கிராமப் பகுதிகளில் 1.7 கோடி மற்றும் நகர்ப்ப குதிகளில் 4.4 கோடி இணையதள இணைப்பு கள் பயன்பாட்டில் உள் ளன.

சேவை வழங்கும் நிறுவ னங்களின் தொழில் போட் டியால் குறையும் செல் போன் கட்டணம், குறைந்த விலையில் கிடைக் கும் மொபைல் போன்கள், நவீன தொழில் நுட்பங்கள், பரவலான நெட்வொர்க் வசதிகள் என பல காரணங் களால் செல்போன் பயன் பாடு அதிகரித்திருப்பதால் டிஜிட்டல் பரிவர்த்தனை யின் அளவும் கூடிக் கொண்டே வருகிறது.

2019-20 ம் நிதியாண்டில் 4,572 கோடி ரூபாயாக இருந்த டிஜிட்டல் பரிவர்த் தனை 202324 ம் நிதியாண் டில் 18,737 கோடி ரூபாய உயர்ந்துள்ளது.

ஆனாலும் கிராமப் பகு திகளில் டிஜிட்டல் பரிவர்த் தனையை ஊக்குவிக்கவும் அ து ப ற் றி ய விழிப்புணர்வை ஏற்படுத்த வும் மத்திய அரசு பல நட வடிக்கைகளை எடுத்து வரு கிறது. பாரத் நெட் திட்டத்தின் மூலம் 30.06.2024 வரை 2,13,398 கிராமப் பஞ்சாயத்துக ளுக்கு இணையதள வசதி செய்யப்பட்டுவிட்டது. சமீ பத்தில் மத்திய அமைச்ச ரவை எடுத்த முடிவின்படி, கிராமப் பஞ்சாயத்துக ளைத் தாண்டி, கு க் கி ரா ம ங் க ளு க் கு ம் இணையதள வசதியை விரி வுபடுத்தும் வகையில் பாரத் நெட் திட்டத்தில் விதிகள் தளர்த்தப் பட்டுள்ளது.

இதுதவிர வடகிழக்கு மாநிலங்கள், எல்லைப்புற பகுதிகள், நக்சலைட்டுக ளால் பாதிக்கப்பட்ட பகு திகள், தீவுப் பகுதிகள் என நாட்டின் எல்லா பகுதிகளி லும் இணையதள வசதி கிடைக்க பல்வேறு சிறப் புத் திட்டங்கள் வகுக்கப் பட்டு செயல்படுத்தப் படு கின்றன.

இதுவரை 4 ஜி மொபைல் சேவை கிடைக் காத கிராமங்கள் அனைத் திற்கும் அது கிடைக்கும் வகையில் 26 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்பாட்டில் உள்ளது.

அதிவேக இணையதள சேவை வழங்கும் வகையில் சென்னையிலிருந்து அந்த மானுக்கும்; கேரள மாநி லம் கொச்சியிலிருந்து லட் சத்தீவுகளுக்கும் (1869 கி.மீ. நீளம்) கடலுக்கு அடியில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் பதிக்கும் பணியும் முடிவு றும் நிலையில் உள்ளது. அதிவேக இணையதள சேவைக்கான உட்கட்ட மைப்பு பணிகளுக்காக 24 மாநிலங்களுக்கு மூன்றாயி ரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந் தப் பணிகளை தடைக ளின்றி விரைந்து முடிக்கும் வகையில் தேவையான சட் டத்திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளது.

இதுதவிர, எந்தெந்தப் பகுதிகளில் செல்போன் நெட்வொர்க் பிரச்னைகள் உள்ளது, அதை எப்படி சரி செய்வது என்பது பற்றி டிராய் அமைப்பு அவ்வப் போது ஆய்வுகளை நடத்தி அதன் முடிவுகளின்படியும் தேவையான நடவடிக்கை களை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் பெம்மசனி சந்திரசேகர் பதி லளித்தார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் - பம்மலில்

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா - மாபெரும் சிறப்பு கருத்தரங்கம்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைக்கிறார்!

கோவி.செழியன் - எழிலன் நாகநாதன் - கோவை நாகநந்தினி உரை!

சென்னை, ஆக.3-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி மாபெரும் சிறப்பு கருத்தரங்கம் நாளை 4-ஆம் தேதி மாலை பம்மலில் நடைபெறுகிறது. இக்கருத்த ரங்கில் கோவி.செழியன், எம். எல்.ஏ., - டாக்டர் எழிலன் நாக நாதன் - கோவை நாகநந்தினி ஆகியோர் கலந்து கொண்டு கருத்தரங்க உரையாற்றுகின் றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை யொட்டி, மாபெ ரும் சிறப்பு கருத்தரங்கம், தாம் பரம் மாநகராட்சி பம்மல் இரட்டை பிள்ளையார் கோயில் சந்திப்பு அருகில் அமைந்துள்ள எஸ்.எஸ்.மகால் திருமண மண்டபத்தில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் வி.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.

பம்மல் மண்டலக் குழுத் தலைவர் - பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணா நிதி, கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலா ளர்கள் அ.தமிழ்மாறன், ந. நவீன் ஆகியோர் அனைவரை யும் வரவேற்று பேசுகின்றனர்.

மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கி ணைப்பாளர்கள் எஸ்.உதயகு மார், என்.சத்யராஜ், கே. கே.சண்முகம், ஜெ.சத்தியசீலன், ஜி.எஸ்.சீனி வாசன், வி.மணீஷ்குமார், பர் வின் நிஷா ஆகியோர் முன் னிலை வகிக்கின்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், குறு-சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன். இக்கருத் தரங்கை தொடங்கி வைத்து பேசுகிறார்.

கலைஞரும் - தளபதியும் என்ற தலைப்பில் தமிழக அரசு தலைமை கொறடா கோவி. செழியன் அவர்களும், கலைஞ ரும் - தமிழ்நாடும் என்ற தலைப்பில் கழக மருத்துவ அணி செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் அவர்க ளும், கலைஞரும் - அண்ணா வும் என்ற தலைப்பில் தலை மைக் கழக பேச்சாளர் நாகநந்தினி அவர்களும் கலந்து கொண்டு கருத்தரங்க உரை ஆற்றுகின்றனர்.

கழகப் பொருளாளர் - கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தலைமை தீர்மானக் குழு செய லாளர் மீ.அ.வைதியலிங்கம், கழக சட்டமன்ற உறுப்பினர் கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணா நிதி, வரலட்சுமி மதுசூதனன், மாவட்டக் கழக நிர்வாகிகள் த.துரைசாமி, து.மூர்த்தி, வெ.விசுவநாதன்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், ஆர்.டி. அரசு, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர்கள் படப்பை ஆ.மனோகரன், செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநக ராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை கோ.காமராஜ், தலை மைச் செயற்குழு உறுப்பினர் கள் க.அன்புச்செல்வன், ஜி.சி. அன்புச்செழியன், ஆதிமாறன், பம்மல் வடக்கு பகுதி செயலா ளர் த.ஜெயக்குமார், தொ.மு.ச. பேரவைச் செயலாளர் இரா. பொன்னுராம், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய்ஜெயகாந்த் பாரதி, மாவட்டப் பிரதிநிதி எஸ்.கே.நெப்போலியன் மற் றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலா ளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத் தினர் இக்கருத்தரங்கில் பங் கேற்று சிறப்பிக்கின்றனர்.

முடிவில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் பி.ராஜ லிங்கம், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கி ணைப்பாளர்கள் வெ.ராஜேஷ், வீ.தினேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இக்கருத்தரங்கிற்கான ஏற் பாடுகளை மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கி ணைப்பாளர் வி.ரவிச்சந்திரன் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் இணைந்து செய்து வருகின்றனர்.

தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்களுக்கான தேர்தல்:

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு!

மிகப்பிற்படுத்தப்பட்டோர் - சீர்மரபினர் நலத்துறை அறிவிப்பு!

சென்னை, ஆக.3-

தமிழ்நாடு வக்ஃப் வாரிய (உறுப்பினர்களுக்கான தேர் தல் நடத்துதல்) விதிகள், 1997, விதி-4-ன்படி, தமிழ் நாட்டைச் சார்ந்த பாராளு மன்ற முஸ்லிம் உறுப்பினர் கள் பட்டியல் பெறப்பட்டு, தமிழ்நாடு வக்ஃப் வாரியத் திற்கு மேற்கண்ட வகையில் காலியாக உள்ள ஒரு உறுப் பினருக்கான தேர்தல் நடத் துவதற்கு வரைவு வாக்கா ளர் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படு கிறது. மேற்குறிப்பிட்ட முஸ்லிம் உறுப்பினர்களுக் கான தேர்தல் குறித்த வரைவு வாக்காளர் பட்டிய லின் நகல் 05.08.2024 அன்று தமிழ்நாடு வக்ஃப் வாரிய (உறுப்பினர்களுக்கான தேர் தல் நடத்துதல்) விதிகள் 1997-இல் விதி 5-ன்படி கீழ்க்காணும் இடங்களி லுள்ள அறிவிப்பு பலகைக ளில் வெளியிடப்பட வுள்ளது:-

1. தேர்தல் அதிகாரி/ ஆ ணை ய ர் , மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-600 005.

2. முதன்மைச் செயல் அலுவலர் அலுவலகம், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை-600001.

3. அனைத்து மண்டல வக்ஃப் கண்காணிப்பாளர்க ளின் அலுவலகங்கள் (11 மண்டலங்கள்).

4. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9-ன் அதிகாரபூர்வ வலைதளம்.

2. இந்த வரைவு வாக்கா ளர் பட்டியலில் சேரத் தகு தியுள்ள எந்தவொரு நபரா வது தங்களின் பெயர் சேர்க்கப்படுவது அல்லது சேர்க்கப்படாதது தொடர் பான ஆட்சேபணை மனுக் களை இவ்வரைவு வாக்கா ளர் பட்டியல் வெளியிடப்பட்ட ஒரு வார காலத்திற்குள் அதா வது 12.08.2024 மாலை 3.00 மணி வரை தமிழ்நாடு வக்ஃப் வாரிய (உறுப்பினர் களுக்கான தேர்தல் நடத்து தல்) விதிகள், 1997-இல் விதி-6-ன்படி, தேர்தல் அதி காரியிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின் றனர். மேற்படி ஆட்சே பணை மனுக்களை ஆய்வு செய்து தேர்தல் அதிகாரி யால் ஆணைகள் வெளியி டப்பட்டு அவை இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும்.

3. தேர்தல் நடத்துவது தொடர்பான கால அட்ட வணை தேர்தல் அதிகாரி யால் தமிழ்நாடு அரசிதழில் விரைவில் தனியே வெளியி டப்படும் என்று மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினிர் துறை தேர்தல் அதிகாரி அறிவித் துள்ளனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியம் எளாவூர் ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்து தீர்வு காணப்பட்டு சான்றிதழ்களை மாவட்ட கழக செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் கே.வி. ஜி.உமாமகேஸ்வரி, மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகர். டி.கே.சந்திரசேகர், கே. ஆறுமுகம், எஸ்.ராமஜெயம், எம்.ஜெயசந்திரன், மணி, எஸ்.எம்.ரவி, வேதாச்சலம், நத்தம். ஜெயராமன், காளத்தி, மணி, எஸ்.எம்.ரவி, சரவணன், ரவி, சாந்தி, பழனி, கௌரிசங்கர், தியாகு, மீசை ராஜா, பாபு, கோவிந்தன், செல்வம், ஏழுமலை, வாசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டு வந்த

அருந்ததியினருக்கான 3 சதவீத உள்ஒதுக்கீடு - உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு!

ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. அருந்ததி நகரில் இனிப்பு வழங்கி கொண்டாடினார்!

சென்னை, ஆக 3-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் கொண்டு வந்த அருந்ததியின ருக்கான 3 சதவீத உள் ஒதுக்கீடு குறித்து உச்சநீதிமன்றம் வழங் கிய தீர்ப்பினையொட்டி ப. தாயகம்கவி எம்.எல்.ஏ. அருந் ததி நகரில் இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 2009 ஆம் ஆண்டு சட் டப்பேரவையில் அருந்ததியர் மக்களுக்காக 3 சதவீத உள் ஒதுக்கீட்டை கொண்டு வந் தார். அதனை முத்தமிழ் அறி ஞர் கலைஞர் அவர்களின் வழி காட்டுதலோடு கடந்த 2009 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கு உடல்நிலை பிரச் சினை காரணமாக மருத்துவம னையில் இருந்த சூழலில் அன் றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த முதல மைச்சர் கழக தலைவர் அவர் கள் ஒரு கடிதம் மூலம் அனுப்பி கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களே அருந்ததியினருக் கான 3 சதவீத ஒதுக்கீடு சட்ட மசோதாவை தாக்கல் செய் தார். அதை அடுத்து அருந்தது யினருக்கு 3 சதவீத உள் ஒதுக் கீடு வழங்கி சட்டம் ஏற்றப்பட்டது. எனினும் இந்த சட்டத்தை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நடந்து வந்தது நிலையில் இந்த வழக்கில் தலைமை நீதிபதி சந் திர சூட் அவர்கள் தலைமையி லான 7 நீதிபதிகள் அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியது. அதில் முத்தமிழ் அறிஞர் கலை ஞரால் கொண்டுவரப்பட்ட அந்த சட்டம் செல்லுபடி ஆகும் என்று தீர்ப்பு அளிக்கப் பட்டது.

அதனைத்தொடர்ந்து கழக துணை அமைப்புச் செயலா ளர், திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்க றிஞர் ப.தாயகம்கவி, திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதியில் வார்டு எண்:71ல் அமைந்துள்ள அருந்ததி நகருக்கு சென்று அங் குள்ள மக்களுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த அருந்ததியின ருக்கான 3 சதவீத உள் ஒதுக்கீடு செல்லும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின் மகிழ்ச்சியை கொண் டாடும் வகையில் 71-அ வட் டச்செயலாளர் மா.ருத்ர மூர்த்தி அவர்களின் தலைமை யில் மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

அதற்க்கு முன்னதாக அருந் ததி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள மகாத்மாகாந்தி சிலை அருகில் முத்தமிழ் அறி ஞர் கலைஞர் அவர்களின் திரு வுருவப்படம் வைக்கப்பட்டு அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் மலர்களைத்தூவி மரி யாதை செலுத்தி அங்கு கூடியி ருந்த மக்கள் மத்தியில் கழக துணை அமைப்புச் செயலா ளர், திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்க றிஞர் ப.தாயகம்கவி, அருந்ததி யினருக்கான 3 சதவீத உள் ஒதுக்கீடு சட்டம் குறித்து உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை விளக்கமாக எடுத்தரைத்தார்.

71வது வார்டு மாமன்ற உறுப்பினர்-புனிதவதி எத்திரா சன், வட்ட துணைச்செயலாளர்-உமேஷ்கு மார், பகுதி பிரதிநிதிகள்-நரேஷ், விஸ்வநா தன், பகுதி மாணவர் அணி அமைப்பாளர்-நிறைமொழி, ஐ.டி.விங். தொகுதி ஒருங்கி ணைப்பாளர்-எஸ்.கௌதம், ஆதிதிராவிடர் நலக்குழு பகுதி துணை அமைப்பாளர்-கா மேஷ், ஐ.டி.விங். வட்ட ஒருங் கிணைப்பாளர்-பிரேம், மகளிர் தொண்டர் அணி பகுதி துணை அமைப்பாளர்- கெஜலட்சுமி, மகளிர் அணி பகுதி துணை அ மைப்பாளர்-காயத்திரி, ரேவதி, பாகமுகவர்-காந்தா ராவ், சீனி, ஜாபர் மற்றும் கோதண்டமூர்த்தி, தீபக், சுகு மார், ஆகியோர் உடனிருந்த னர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் கொண்டு வந்த அருந்ததியினருக்கான 3 சதவீத உள் ஒதுக்கீடு குறித்து உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினையொட்டி ப. தாயகம்கவி எம்.எல்.ஏ. அருந்ததி நகரில் இனிப்புகள் வழங்கி கொண்டாடினார். 71வது வார்டு மாமன்ற உறுப்பினர்–புனிதவதி எத்திராசன், வட்ட துணைச்செயலாளர்–உமேஷ்குமார், பகுதி பிரதிநிதிகள்–நரேஷ், விஸ்வநாதன், பகுதி மாணவர் அணி அமைப்பாளர்–நிறைமொழி, ஐ.டி.விங். தொகுதி ஒருங்கிணைப்பாளர்–S. கௌதம், ஆதிதிராவிடர் நலக்குழு பகுதி துணை அமைப்பாளர்–காமேஷ், ஐ.டி.விங். வட்ட ஒருங்கிணைப்பாளர்–பிரேம், மகளிர் தொண்டர் அணி பகுதி துணை அமைப்பாளர்– கெஜலட்சுமி, மகளிர் அணி பகுதி துணை அமைப்பாளர்–காயத்திரி, ரேவதி, பாகமுகவர்–காந்தாராவ், சீனி, ஜாபர் மற்றும் கோதண்டமூர்த்தி, தீபக், சுகுமார், ஆகியோர் உடனிருந்தனர்.